I Additional District Court, Thoothukudi.

O.S.No.68/2021 நாள் : 18.06.2026 பி.சா.3– திரு. மால்

தினகரன்

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

இந்த வழக்கில் நட்டார்முத்து மகன் முத்துசிங் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் ராமர்நாடாரின் வகையறா என்றால் சரிதான். அவருக்கு தாவா சொத்திற்கு தென்புறமாக சொத்து உள்ளது என்றால் சரிதான். தென்புறமாக உள்ள மேற்படி சொத்தை வாதி வகையறாக்கள் ராமர்நாடாருக்கு கிரையம் கொடுத்ததற்கான சா.சா.ஆ.1 கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சாட்சி சா.சா.ஆ.1 ஐ படித்துவிட்டு மேற்படி நபர்கள் சந்தோஷ்ராஜ் நாடார் மற்றும் ஜெமிஅம்மாள், ராமர்நாடாருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்று மாற்றி கூறுகிறார். சா.சா.ஆ.1ல் சந்தோஷ்ராஜ் நாடாருக்கும் ஜெமியம்மாளுக்கும் டி.மு கோர்ட் அ.வ.எண்.5/1935 தீர்ப்பின்படி பாத்தியப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சாயர்புரம் கிராமம் புல எண்.332/1ல் 1.62 ஏக்கரில் எல்கையாக, என் கையிருப்பு நிலத்திற்கும் தெற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கையிருப்பு நிலம் என்பது தாவா சொத்து என்றால் சரிதான். அதனால் தாவா சொத்து வடபுற எல்லையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் சந்தோஷ்ராஜ் நாடாருக்கு மெர்ஸி சுகுணாபாய் ஜெமியம்மாள் எழுதி கொடுத்த 1945 பத்திரத்தில் தாவா சொத்து தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தாவா சொத்து எங்கள் குடும்பத்துக்கு பாத்தியப்பட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது அப்பட்டமான பொய் என்றால் அதை நான் மறுக்கிறேன். சாயர்புரம் கிராமம் புல எண்.332/1பி எங்கள் குடும்பத்திற்கு வந்ததாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேத மாணிக்க நாடார் வேறு நபர் என்றும் மால் நாடார் என்பவர் வேறு நபர் என்றும் சொன்னால் சரிதான். அவர்கள் அண்ணன் தம்பி ஆவார்கள். மேற்படி வேதமாணிக்க நாடாரின் பிள்ளைகளுக்குதான் தூத்துக்குடி டி.மு நீதிமன்றம் அ.வ.எண்.5/1935 வழக்கின் படி தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதனால் சந்தோஷ்ராஜ் நாடார் மற்றும் மெர்ஸி சுகுணாபாய் ஜெமியம்மாளுக்கு பிறகு அவரது கீழ் இறங்கு வாரிசுகளுக்கு சொத்து பாத்தியப்பட்டது என்றும் மீண்டும் அவர்களின் மூதாதையர்களுக்கு தீர்ப்பின்படி செல்ல வாய்ப்பு இல்லை என்றும் சொன்னால் சரிதான். அதனால் தாவா சொத்தில் உள்ள

கூடுதல் விஸ்தீரணத்திற்கும் மேற்படி சந்தோஷ்ராஜ் நாடார் மற்றும் மெர்சி சுகுணாபாய் ஜெமியம்மாளின் தகப்பனாருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். சந்தோஷ்ராஜ் நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து அவரது வாரிசுகளான சரோஜினி அம்மாள், எமிலி வில்லிஸ், எய்ல்ஸ் ஜெமி, ஆகியோர் அவர்களின் சகோதரரான நலராஜ்க்கு வாசா.ஆ.2 படி தாவா சொத்தை குறித்து விடுதலை செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதனால் தாவா சொத்திற்கு வாதிகளின் தகப்பனார்தான் உரிமையாளர் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பத்தி 2ல் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. சாயர்புரம் கிராமம் புல எண்.333/1பி–ல் எங்களுக்கு நிலம் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். நாங்கள் விற்ற சொத்து தவிர அந்த பகுதியில் எங்களுக்கு வேறு சொத்து இல்லை. எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து புல எண்.332/1பி லும் புல எண்.333/1பி லும் இருந்தது. புல எண்.332/1பில் எங்களுக்கு சொத்து இருந்ததாக காட்ட அ பதிவேடு உள்ளது அதற்கு விண்ணப்பித்துள்ளோம். நான் சொல்வது போல் புல எண்.332/1பி குறித்து எங்கள் பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. அ பதிவேடு என்பது வருடத்திற்கு ஒருமுறை மாறக்கூடியது என்றால் சரியல்ல. அபிஷேகநாதர் ஆலயம் என்ற தேவாலயம் தாவா சொத்திற்கு அருகில் உள்ளது. அந்த தேவாலயம் புல எண்.333ல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தேவாலயம் புல எண்.333/1பி ல் வடபுறமாக உள்ளது என்றால் சரிதான். புல எண்.333/1பி ல் தென்புறம் காலியாக உள்ளது என்றால் சரிதான். புல எண்.333/1பி ல் மேற்படி தென்புறமுள்ள காலி இடத்தை தான் வா.சா.ஆ.13 படி தேவாலயத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். தேவாலயத்திற்கு தென்புறமாக தேவாலயத்திற்கு சொந்தமான காம்பவுண்ட் சுவர் உள்ளது. சொத்தை எங்களிடமிருந்து தேவாலயம் வாங்கிய பிறகு மேற்படி காம்பவுண்ட் சுவரை தென்புறமாக தள்ளி அமைத்துவிட்டார்கள். அந்த காம்பவுண்ட் சுவருக்கு தென்புறமாக தேவாலயத்திற்கோ எங்களுக்கோ சொத்து எதுவும் இல்லை. நிரூபண வாக்குமூலம் பத்தி 3ல் சொல்லப்பட்டுள்ள வாய்மொழி பாகப்பிரிவினைக்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அதன் நடைமுறைபடுத்தப்பட்டதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அதில் பத்தி 4ல் உள்ள சங்கதிகளை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 23.01.2007, 24.01.2007, 28.12.2007, 02.04.2007, 13.04.2007,12.09.2008,19.11.2012 மற்றும் 19.11.2012 ஆகிய தேதிகளில் பிரதிவாதிகளுக்கும் அவரது முன்பாத்தியஸ்தர்களுக்கும் நாங்கள் ஏற்படுத்தியுள்ளதாக சொல்லும் கிரையங்கள் போலியான மோசடியான

கிரையங்கள் என்று சொன்னால் சரியல்ல. அவை தாவா சொத்தில் வாதிகளின் உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால சரியல்ல. வாதிகள் தாவா சொத்திலிருந்து தள்ளி குடியிருந்து வருவதால் தாவா சொத்தை வாதிகள் அடிக்கடி வந்து பார்க்க முடியவில்லை என்றால் சரியல்ல. அதனால் வழக்குமூலம் உண்மையானது என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமையில்லா சொத்தை கிரையம் செய்ய எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும் அதனால் மேற்படி ஆவணங்கள் செல்லாதது என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கும் அவர்களின் முன்பாத்தியஸ்தர்களுக்கும் எழுதிகொடுத்த கிரைய பத்திரங்களில் புல எண்.333/1பி என்றுதான் குறிப்பிட்டு கொடுத்திருக்கிறோம் என்றால் சரிதான். பி.சா.ஆ.7 பாகப்பிரிவினை பத்திரத்திலும் புல எண்.333/1பி தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அம்மமுத்து நாடார் வேறு என்றும் கங்கையாளும்பெருமாள் என்பவர் வேறு என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. புல எண்.333/1பி க்கு தென்புறமாக புல எண்.332/1பி உள்ளது என்றால் சரிதான். அதனால் தான் பி.சா.ஆ.7 ல் மேல்புற எல்லையாக அம்மமுத்து நாடார் சொத்து என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து வேறு என்றும் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் என்னால் உற்பத்தி செய்யப்பட்டு பிரதிவாதிகளிடம் கொடுத்து தாக்கல் செய்யப்பட்ட மோசடியான ஆவணங்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

தூத்துக்குடி